1973 நவம்பர் 22]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்த சோப்புத் தொழிற்சாலை லாபத்தில் நடந்துகொண்டிருக்கிறது. இன்னும் அதை விரிவுபடுத்தினால், அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு பெருகும். ஆகவே, அரசு மறுபரிசீலனை செய்து விரிவு படுத்த நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, உற்பத்தி ஆகின்ற பொருட்களை பாதுகாக்கவும், சரியான போக்குவரத்திற்கும் போதுமான வசதி இல்லாததினால் மேற்கொண்டு விரிவுபடுத்த முடியாது என்று சொல்லி யிருக்கிறார்கள். இருந்தாலும், இதுபற்றி மறுபரிசீலனை செய்யலாம்.

சென்னை சட்டக் கல்லூரி விடுதி

*** 299 வினா—திருமதி த. ந. அனந்தநாயகி :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்பொழுதுள்ள சென்னை சட்டக் கல்லூரி விடுதிக் கட்டடத்தையும், இடத்தையும் அரசு விலைக்கு வாங்கி, விடுதியை விரிவுபடுத்தும் திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது ?

(இ) தற்போதுள்ள விடுதியில், இட நெருக்கடியைத் தவிர்க்க அரசு அவசரமாகக் கவனிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) தற் போதுள்ள சென்னை சட்டக் கல்லூரி விடுதிக் கட்டிடத்தையும், இடத்தையும் அரசு விலைக்கு வாங்கி கட்டிடத்தை பழுது பார்த்து வருகிறது. கூடுதல் விடுதிக் கட்டிடம் ரூ. 12 லட்சம் செலவில் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. விரைவில் கட்டிட வேலை துவக்கப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கூடுதல் விடுதிக் கட்டிட வேலை எங்கு ஆரம்பிக்கப் போகிறார்கள் ? எப்போது முடியும் என்று தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : இப்போது சட்டக் கல்லூரி மாணவ விடுதி இருக்கிற இடத்திலேயே கூடுதல் விடுதி கட்ட 11 லட்சத்து 38 ஆயிரம் மதிப்பீட்டுச் செலவில் இடத்தையும், கட்டிடத்தையும் விலைக்கு வாங்கியிருக்கிறது. அங்கே 12 லட்சம் ரூபாயில் 248 மாணவர்கள் தங்க வசதி அளிக்கும் வகையில் விடுதி விரைவில் கட்டப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த வருடம் சட்டக் கல்லூரி விடுதியில் தங்கிப் படிக்க எத்தனை பேர் விண்ணப்பம் போட்டார்கள் ? எத்தனை விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன ? எத்தனை பேர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போதுள்ள விடுதியில் 222 பேர்கள் தான் தங்கிப் படிக்க வசதி உண்டு. புதியதாக கட்ட இருக்கிற விடுதியில் 248 பேர்கள் தங்கிப் படிக்க வசதி இருக்கும். ஆக மொத்தத்தில் 470 பேர்கள் தங்கிப் படிக்க எதிர் காலத்தில்தான் வசதி கிடைக்கும். மற்ற விவரங்களுக்குத் தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

திரு. துரைமுருகன் : இப்போது இருக்கிற சட்டக் கல்லூரி விடுதியில் 222 பேர்கள்தான் தங்கிப் படிக்க முடியும் என்றும், புதியதாக கட்ட இருக்கிற விடுதியில் 248 பேர்கள் தங்கிப் படிக்க வசதியேற்படும் என்றும் சொன்னார்கள். இப்போதிருக்கிற விடுதியிலேயே குளிப்பறை, கழிவறை எதுவும் கிடையாது. ஆகவே, இதையும் இடித்துவிட்டு புதியதாகக் கட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போதுள்ள விடுதிக்கு நாம் இதுவரை வாடகை கொடுத்து எடுத்து வைத்திருந்தோம். அந்தக் கட்டிடத்தையே இப்போது வாங்கியாகிவிட்டது. 50 ஆயிரம் செலவழித்து பழுது பார்க்கப்பட்டிருக்கிறது. அங்கே குளிப்பறை, கழிவறை வசதி போதுமானதாக இல்லை என்றால் அதைப் பழுது பார்க்கிற வகையில் அந்த வசதியைச் செய்து கொள்ளலாம். அதையே இடிக்க வேண்டிய அவசியம் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : இப்போது சட்டக் கல்லூரி விடுதியில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்குக் காரணம், மாநிலம் முழுவதற்கும் ஒரு சட்டக் கல்லூரி என்பதாக இருப்பதுதான். ஆகவே, மதுரையில்

1973 நவம்பர் 22]

ஒரு சட்டக் கல்லூரியை அமைத்தால் இந்தக் குறை நீங்கிவிடும். மதுரையில் ஒரு சட்டக் கல்லூரி ஏற்படுத்த அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி பல தடவை ஆராய்ந்து, ஆராய்ந்து அது கைவிடப்பட்டுள்ளது. இப்போது அதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : சட்டக் கல்லூரியில் படிக்கும் மாணவிகளுக்கு தங்க விடுதி வசதி எதுவும் கிடையாது. அவர்கள் சேவாசதன் ஹாஸ்டலில் தங்குகிறார்கள். அப்படி வெளியே தங்கினால் அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கிடைப்பதில்லை. ஆகவே, சட்டக் கல்லூரி மாணவிகளுக்கு என்று விடுதி ஒன்றைக் கட்டுவார்களா ? அல்லது சட்டக் கல்லூரி மாணவிகள் வெளியில் தங்கினாலும் அவர்களுக்கு வேண்டிய நிதி உதவி அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சட்டக் கல்லூரி மாணவிகளுக்கு என்று தனி விடுதி கட்டுகிற எண்ணம் இருக்கிறது. மாநிலக் கல்லூரி பெண்கள் விடுதியை ஒட்டியே இதைக் கட்ட இடத்தைப் பார்க்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இடம் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் அதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : சட்டக் கல்லூரி மாணவ விடுதியின் ஒரு பகுதியிலேயே சட்டக் கல்லூரி மாணவிகளும் தங்க அனுமதித்தால் என்ன என்று கேட்க விரும்புகின்றேன்.

(பதில் இல்லை.)

கலைக் கல்லூரிகள்

***300 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் கலைக்கல்லூரியை அரசு ஏற்று நடத்தவும், அதற்கு மாண்புமிகு டாக்டர் கலைஞர் கலைக் கல்லூரி எனப் பெயர் வைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் ஏதாவது அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?